மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண். 152/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:முருகன் | தேதி : 17.02.26 |
| வயது : | த/பெ : பால் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

17.02.26 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 3 ம் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையினரால் பால் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண் 611 ன் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். வழக்கு தபசில் சொத்திற்கு 1 ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 1 ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதுகளின் இணையவழி நகல்களை (5 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:15:53 +0530

**வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:15:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.